# வெடுக்குநாறிமலையில் கைதானவர்களுக்காக யாழிலிருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி

## பகிரங்க அழைப்பு விடுத்தார் சுகாஸ்!




வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரி நாளை காலை யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“அனைவருக்காகவும் இன்று 8 அப்பாவி உறவுகள் வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்கக் கோரி அவர்களின் உறவுகள் நாளை காலை 10 மணியளவில் வவுனியாவில் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். இந்நிலையில், அவர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக நாளை காலை 07.30 மணிக்கு யாழ். நல்லூர் ஆலய முன்றலில் இருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்கள் ஒரு குற்றமும் செய் யாதவர்கள். இவர்கள் செய்த பெரிய குற்றம் 2➤


# மாலைக்கதிர்
Maalaikkathir








சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 02 செவ்வாய்க்கிழமை 15.03.2024 கதிர் 203


## தயாசிறியின் தலைமையில் புதிய கூட்டணி உதயம் 20 ஆம் திகதி அங்குரார்ப்பண விழா நடைபெறும்!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையில். உருவாக்கப்பட்டுள்ள ‘மனிதநேய மக்கள் கூட்டணியின் அங்குரார்ப்பண விழா எதிர்வரும் 20ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச அரங்கில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட 18 கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்டுள்ள மேற்படி மனிதநேய மக்கள் 2➤

## நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மனநோயாளியா?

### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கேள்வி




நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இனவெறி, மதவெறி, பாலியல் சார்ந்த மனநோய்க்கு உட்பட்டவரா என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுவிக்க வலியுறுத்தியும், பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்தும் நெடுங்கேணியில் இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கைது செய்யப்பட்டவர்களின் ஒருவரின் வேட்டியை உருவி அரை நிர்வாணமாகக் கொண்டு வந்திருந்தார்கள். நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வக்கிர புத்தி கொண்டவர். ஏனெனில் ஆண் ஒருவரை அரை நிர்வாணமாகக் கொண்டு 2➤

## சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து 19, 20 ஆம் திகதிகளில் விவாதம் நடைபெறும்



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகதிகளில் விவாதிப்பதற்கு நேற்று (14) தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் ஹன்ச அபேயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மார்ச் 19 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையிலும், 20 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரையிலும் விவாதம் நடைபெறவுள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பை விவாதத்தின் இரண்டாம் நாளான 20 ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மார்ச் 21 ஆம் திகதி காலை 2➤

## வட்டுக்கோட்டையில் இளைஞனைக் கடத்திப் படுகொலை நால்வருக்கு எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியல்!

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் இளைஞனை கடத்தி படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் நால்வரை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தனது மனைவியுடன் காரைநகருக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு வீடு திரும்பியவர்களை பொன்னாலை பால பகுதியில் உள்ள கடற்படையின் முகாம் முன்பாக வைத்து வன்முறை கும்பல் கடத்திச் சென்றது.

கணவனை ஒரு வாகனத்திலும், மனைவியை ஒரு வாகனத்திலும் கடத்திய வன்முறை கும்பல், மனைவியை சித்தங்கேணி பகுதியில் இறக்கி விட்டுச் சென்றது. கணவனை கடத்தி சென்றவர்கள் கணவனை கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கி படுகாயங்களுடன் வட்டுக்கோட்டை வைத்திய சாலை முன்பாக வீசிச் சென்றனர்.

படுகாயத்துடன் காணப்பட்டவரை வைத்தியசாலை பணியாளர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வட்டுக்கோட்டையில் ஓர் இளைஞனைக் கைது செய்தனர். பின்னர், கிளிநொச்சியில் பதுங்கியிருந்த அராலிப் பகுதியைச் சேர்ந்த நான்கு பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடந்த புதன்கிழமை மல்லாகம் நீதவான் 2➤

## ரஷ்யாவில் ஜனாதிபதித் தேர்தல் இன்று ஆரம்பமாகியது!

ரஷ்யாவில் அடுத்த ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் இன்று தொடங்கியது.

ரஷ்ய பகுதிகள் மற்றும் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்ட உக்ரைன் பகுதிகளில் உள்ள மக்கள் முதல் முறையாக வாக்களிக்கின்றனர்.

ரஷ்யாவின் 11 நேர மண்டலங்களிலும் அமைதியாக வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

இதேபோல் வெளிநாடுகளில் வாழும் ரஷ்யர்கள் அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங்கள், துணைத் தூதரகங்களுக்கு சென்றும் மின்னஞ்சல் வாயிலாகவும் வாக்களிக்கின்றனர். வெளிநாடுகளில் முன்கூட்டியே வாக்குப்பதிவு தொடங்கிவிட்டது குறிப்பிடத்தக்கது. (04)

## இலங்கையில் இராணுவத் தளங்களை அமைக்க சீனா திட்டம்? அமெரிக்காவின் உளவுத்துறை அறிக்கையில் தெரிவிப்பு

இலங்கை உட்பட பல நாடுகளில் இராணுவ தளங்களை நிறுவுதல் தொடர்பாக சீனா ஆய்வுகளை செய்து வருவதாக அமெரிக்காவின் சமீபத்திய உளவுத்துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவின் ஜிபூட்டி மற்றும் கம்போடியாவில் உள்ள ரீம் கடற்படைத் தளத்தை மேம்படுத்துவதைத் தாண்டி, மியான்மார், கியூபா, கினியா, பாகிஸ்தான், சீஷெல்ஸ் ஆகிய நாடுகளில் ராணுவ தளங்களை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சீனா ஆராய்ந்து வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனா, ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தற்போதுள்ள சர்வதேச சட்ட முறைமைகளுக்கு சவால் விடும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்பு புலனாய்வு பிரிவு வெளியிட்ட 2024 ஆண்டிற்கான வருடாந்த அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கையிலேயே மேற்படி விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(றெம-51)

# சீன இராணுவம் இலங்கை இராணுவத்திற்கு போர்க்கள உபகரணங்களை வழங்கியுள்ளது

## வெடிபொருட்களை அறியும் 18 றொபோக்களும் உள்ளடக்கம்



சீன இராணுவம் நேற்று இலங்கை இராணுவத்திடம் வெடிபொருட்களை செயலிழக்கச் செய்யும் றொபோக்கள் உள்ளிட்ட விசேட உபகரணங்களின் தொகுதியொன்றை கையளித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோர் கலந்து கொண்ட விழாவொன்றின் போதே இலங்கை இராணுவத்திற்கு மேற்படி பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வெடிபொருட்களைக் கண்டறிந்து அவற்றை அழித்தல் திறன் கொண்ட 'ரியாது 4000' என பெயரிடப்பட்ட 18 றொபோக்கள், வெடிபொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் சிறப்புத் திறன் கொண்ட 18 வாகனங்கள், வெடிப்பொருட்களிலிருந்து பாதுகாக்கும் சிறப்பு திறன் கொண்ட 10 கவச ஜெக்கெட்டுகள், வெடிப்பொருட்களிலிருந்து பாதுகாக்கும் சிறப்பு திறன் கொண்ட நடுத்தர அளவிலான 10 வாகனங்கள் மற்றும் வெடிபொருட்களை செயலிழக்கச் செய்யும் ஒரு தொகை உபகரணங்கள் ஆகியன இந்நிகழ்வின் போது இராணுவ தளபதியிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரெம-54)

# பெரிய வெங்காயத்தின் விலை கட்டுப்பாடு விதிக்க முடிவு!

எதிர்வரும் பண்டிகை காலத்தில் பெரிய வெங்காயத்தின் விலையை குறைக்கும் வகையில் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க வர்த்தக அமைச்சு நேற்று நடவடிக்கை எடுத்துள்ளது.

பண்டிகை காலத்தில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவது தொடர்பில் அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களுக்கும் வர்த்தக அமைச்சருக்கும் இடையில் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. அதில், இறக்குமதியாளர்கள் தங்களுடைய கையிருப்பிலுள்ள பெரிய வெங்காயத்தை 450 ரூபா மற்றும் 500 ரூபாவிற்கு இடையில் விற்பனை செய்ய இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்களுடனான கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதுடன், போட்டி



விலையில் தமது பொருட்களை உள்ளூர் சந்தைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# சுகாதார தொழிற்சங்க கூட்டணி மீண்டுமொரு வேலைநிறுத்தத்தில்!

நாடளாவிய ரீதியில் மீண்டுமொரு வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டணி அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 19 மற்றும் 20 ஆகிய திகதிகளில் வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கையினை தற்காலிகமாக நிறத்தி, நிதியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சிற்கு கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை எனவும் சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் இணை ஏற்பாட்டாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

## தயாசிறியின்...

கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கிடையிலான உடன்படிக்கை குறித்த 20 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்படவுள்ளது. வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப்பகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட கட்சிகள் புதிய கூட்டணிக்கான இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ளதாகவும், கிட்டத்தட்ட நாற்பது சிவில் அமைப்புகள் மேற்படி புதிய கூட்டணிக்கு ஆதரவளிக்க சம்மதத்தை தெரிவித்துள்ளதாகவும் புதிய கூட்டணியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

புதிய கூட்டணியின் கொள்கைகளை பிரதான கட்சிகளில் எவையேனும் ஏற்றுக்கொண்டால், எதிர்வரக்கூடிய தேர்தலில் அக்கட்சிக்கு புதிய கூட்டணி ஆதரவளிக்கும் எனவும், இல்லையாயின் மனித நேய மக்கள் கூட்டணியின் தலைவர் தயாசிறி ஜயசேகர ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் எனவும் புதிய கூட்டணியின் ஊடகப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெம-53)

## நெடுங்கேணி பொலிஸ்...

வருகின்றபோது பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸார் உள்ளார்கள். பொதுமக்கள், பெண்கள் வெளியில் நிற்கின்றார்கள். அப்படி இருக்கையில் அவர்களுக்கு முன்னே அரை நிர்வாணமாகக் கொண்டு செல்ல நெடுங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனுமதிக்கின்றார் என்றால் அவரிடம் ஒரு மனநோய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இனவெறி, மதவெறி, பாலியல் சார்ந்த மனநோய்க்கு உட்பட்டவரா என்ற கேள்வி எழுகின்றது. மிருகக் குணம் கொண்ட ஒருவரால் கைது செய்யப்பட்ட 8 பேரும் மறுநாள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர்தான் குற்றச்சாட்டுக்களைத் தேடிப் பிடித்தார்கள்.

தொல்பொருள் சின்னம் எவற்றுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. பொய்யான அடிப்படையில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் அறிக்கை பெற்று அவர்களைது பிணையை நிறுத்தியுள்ளார்கள். வெடுக்குநாறிமலையை சைவர்களிடம் இருந்து பறித்து எடுப்பதற்கான முயற்சியே நடைபெறுகின்றது.

தொல்பொருள் அமைச்சரும் இதன் சூத்திரதாரியாக இருந்து செயற்படுகின்றார். அவர் இனவெறிச் செயற்பாட்டைக் கடந்த காலங்களில் மேற்கொண்டவர். குருந்தூர்மலையில் அகழ்வு செய்யப் போகின்றோம் எனப் பொய் சொல்லி அங்கு பௌத்த விகாரையை நிறுவியவர். அதற்கு முழு சூத்திரதாரி விதுர விக்கிரமநாயக்க என்ற தொல்பொருள் அமைச்சர். அதே அமைச்சர்தான் தற்போது இங்கே வன்முறைகளுக்குக் காரணமாக இருக்கின்றார். தமிழ் - சிங்கள கலவரத்தை ஏற்படுத்த முயல்கின்றார். இந்த இனவெறிக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நான்காவது நாளாகக் கைது செய்யப்பட்ட 8 பேரில் 5 பேர் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். அவர்களது உடல் நிலை பாதிப்படைகின்றது. வவுனியாவில் உள்ள மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி இனவெறி பிடித்தவராக இருக்கின்றார். மனித உரிமை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை கைதிகளைப் பார்வையிடவில்லை. குடும்பத்தினரைச் சந்திக்கவில்லை. அவர்களும் இந்த ஒடுக்குமுறைக்குத் துணைபோகின்றார்கள். வவுனியா மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி பதவி விலக வேண்டும். அதன் கொழும்பு அலுவலகம் பேரினவாத நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

நாளை காலை 10 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயத்தின் முன் நடைபெறும் போராட்டத்திலும் அனைவரும் கலந்துகொண்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுக்க வேண்டும்." - என்றார். (அ)

## வெடுக்குநாறிமலையில் ......

வெடுக்குநாறிமலைக்குப் போனதுதான். அங்கு "ஓம் நமச்சிவாய" எனக் கூறி பூஜை செய்வதற்காகவே அவர்கள் அங்கு சென்றார்களே தவிர வேறெதற்காகவும் இல்லை.

இதனால், அவர்கள் தொல்லியல் சட்டத்தை மீறியதாக அவர்களைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் சம்பவத்தை நாம் கண்டுகொள்ளவில்லை என்றால், நாளை வடக்கு - கிழக்கு எங்கும் தொல்லியல் சட்டம் எனக் கூறி அனைத்து பிரதேசங்களையும் ஆக்கிரமிக்கக்கூடும். ஆகவே, அனைவரையும் இந்த வாகனப் பேரணியில் கலந்துகொள்ள வருமாறு பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்." - என்றார். (அ)

## வட்டுக்கோட்டையில் ....

நீதிமன்றில் முற்படுத்தியபோது, கிளி நொச்சியில் கைதான நால்வரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். ஆகவே அவர்களை 48 மணிநேரம் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க வேண்டும், என மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்ற, மன்று நால்வரையும் 48 மணிநேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தது. மற்றைய சந்தேக நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. அத்தோடு அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கும் கட்டளையிட்டது.

அந்நிலையில் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்ட நால்வரையும் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை மன்றில் முற்படுத்திய வேளை அவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இளைஞன் கடத்தப்படும் போது கடற்படை முகாமில் இருந்த நான்கு கடற்படையினரிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்முறைக் கும்பல் தம்மை கடத்த முற்பட்ட போது கடற்படை முகாமினுள் தஞ்சம் கோரி தாம் சென்ற வேளை, கடற்படையினர் அடைக்கலம் கொடுக்காது, தம்மை அடித்து விரட்டி, கடத்தலுக்கு ஒரு வகையில் உதவி இருந்தனர், என உயிரிழந்தவரின் மனைவி குற்றம் சாட்டி வரும் நிலையில், கடற்படை முகாம் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் கடற்படையினர் தஞ்சம் கோரி வந்தவர்களை விரட்டுவதும், கடற்படையின் அருகில் வைத்தே, வன்முறைக் கும்பல் தம்பதியினரை கடத்தி செல்லும் காட்சியும் நேற்றைய தினம் வியாழக்கிழமை ஊடகங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## சபாநாயகர் மீதான.....

9:30 - காலை 10:30 மணி வரை வாய்மொழி கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பின்னர் காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை பெறுமதி சேர் வரி சட்டத்தின் ஏற்பாடு குறித்தும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணையம் சட்டத்தின் கீழ் உத்தரவுகளை விவாதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

மாலைக்கதிர்
Maalaikkathir



# சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் சர்வதேச கணித தின நிகழ்வுகள் நேற்று




(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐக்கிய நாடுகள் நாடுகள் யுனஸ்கோ அமைப்பினால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் மார்ச் 14 ஆம் திகதி சர்வதேச கணித தின நிகழ்வுகள் நடாத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கமைய இவ்வருடம் 2024 ஆம் ஆண்டு "கணிதத்துடன் விளையாடுவோம்" எனும் தொனிபொருளில் நடைபெறும் சர்வதேச கணித தின நிகழ்வுகள் பாடசாலையில் நேற்று நடைபெற்றன.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ. சஞ்சீவன் அவர்களின் வழிகாட்டலில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் தலைமையில் கணித தின நிகழ்வுகள் இடம்பெற்றது.

நோன்பு கால விடுமுறையை கருத்தில் கொண்டு பாடசாலையின் கணிதக் கழக மாணவர்களின் பங்களிப்புடன் நடைபெற்ற நிகழ்வில், கணித தினம் தொடர்பாகவும் கணிதத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு, கணிதத்துடன் விளையாடுவோம் எனும் தொனிபொருளுக்கு இணங்க கணிதப்பூங்காவில் மாணவர்கள் கணித விளையாட்டுக்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பாடசாலையின் கணிதப்பிரிவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# சிறுவர் சித்திரப்போட்டியில் பரிசு பெற்ற மாணவன் திநுக்சன் பாராட்டிக் கௌரவிப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டியில் பரிசு பெற்ற சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய மாணவன் ரீ.தினுக்சன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தில் இருந்து மாகாண மட்டத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்ற ரீ. தினுக்சன் என்ற மாணவனுக்கு அதிபர் எஸ். இளங்கோபன் தலைமையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பிரதம அதிதியாக கலந்துகொண்ட சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரக்குமார் சான்றிதழை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எச். நைறூஸ்கான், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ. நசீர், பி. பரமதயாளன், சித்திர பாட வளவாளர் எஸ்.எல். அப்துல்முனாப், பாடசாலையின் அதிபர் எஸ். இளங்கோபன் சித்திரப் பாட ஆசிரியை செல்வி. என். லிசாந்தனி ஆகியோரின் முன்னிலையில் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்லூரியில் இடம்பெற்றது.

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தொழுநோய் விழிப்புணர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனைப் பிராந்தியத்தில் தொழு நோயினால் பாதிக்கப்பட்டு இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு முறையாக சிகிச்சையளிப்பதற்கும் வைத்திய ஆலோசனைகளை வழங்கும் பொருட்டும் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவினால் தொழுநோயாளர்களை அணுகும் விதம் மற்றும் சிகிச்சை நெறிமுளைகள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கொன்று அண்மையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய தொற்றுநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம்.பசால் அவர்களினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இந்நிகழ்வு பிராந்திய



சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதி உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# ஆலையடிவேம்பு கால்நடை கூட்டுறவுச்சங்க பால் பண்ணையாளர் காரியாலயம் திறப்பு



(எம்.எம்.றம்ஸீன்)

வரையறுக்கப்பட்ட ஆலையடிவேம்பு கால்நடை பால் பண்ணையாளர் விவசாய கூட்டுறவுச்சங்க அக்கரைப்பற்று காரியாலய திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான கட்டடமொன்றிலேயே இக்காரியாலயம் பல வருடகாலத்தின் பின்னர் அமைக்கப்பட்டு சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் சி.விக்னேஸ்வரன் தலைமையில் சங்கத்தின் பிரத்தியேக செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.புஸ்பராஜாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், ஆலையடிவேம்பு பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி திருமதி ரி.கோகுலதாஸ் மற்றும் சமுர்த்தி முகாமையாளர் சீலன் ஆலய தலைவர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அதிதிகள் வரவேற்கப்பட்டு விசேட பூசைகள் இடம்பெற்றன. தொடர்ந்து அதிதிகள் இணைந்து காரியாலயத்தினை திறந்து வைத்தனர்.

இங்கு தலைமை உரையாற்றிய சங்கத்தின் பிரத்தியேக செயலாளர் சோ.புஸ்பராஜா கால்நடை பால் பண்ணையாளர் விவசாய கூட்டுறவுச்சங்கத்திற்கான காரியாலயம் திறக்கப்பட்டதன் அவசியத்தை வலியுறுத்தி பேசினார். மேய்ச்சல் தரை தொடர்பில் பண்ணையாளர்கள் எதிர்கொண்ட சவால்கள் அவற்றை முறியடிக்க மேற்கொண்ட முயற்சிகள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விளக்கினார்.

மேலும் மேய்ச்சல் தரை என பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அரசு உள்ளிட்ட நிறுவனங்கள் வழங்கிய ஆவணங்கள் நீதிமன்றங்களின் தொடரப்பட்ட வழக்குகள் போன்ற விடயங்களை தெளிவு படுத்தியதுடன் ஆயிரக்கணக்கான கால்நடைகள் மேய்வதற்கும் பராமரிப்பதற்கும் உரியதாக இருக்கும் வட்டமடு மேய்ச்சல் தரையினை பாதுகாப்பது சமூகங்களை கடந்து அனைவரது கடமை எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் களவாடப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டதுமான கால்நடைகளின் இழப்புகளுக்கு அரசு இதுவரை உரிய நட்டஈடு வழங்காமையினையும் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம் மேய்ச்சல் தரை தொடர்பான ஆவணங்களின் பிரதிகள் அடங்கிய ஆவண புத்தகங்களை திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளரின் பிரதிநிதி ஆகியோரிடம் ஒப்படைத்தார்.

# ஓபின் ஏஐயின் வீடியோ உருவாக்கும் செய்யறிவு செயலி சோரா ஏஐ இந்தாண்டு முதல் மக்களின் பயன்பாட்டுக்கு!

ஓபின் ஏஐ நிறுவனத்தின் வீடியோ உருவாக்கும் செய்யறிவு செயலி இந்தாண்டு முதல் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வெளியிடப்படும் என அதன் தலைமை தொழிநுட்ப அலுவலர் மிரா முராட்டி தெரிவித்துள்ளார்.

எழுத்து மூலமாக தருகிற உள்ளீட்டை விடியோவாக மாற்றக் கூடிய 'சோரா ஏஐ' என்கிற செயலியை ஓபின் ஏஐ நிறுவனத்தின் சிஇஓ சாம் ஆல்ட்மன் அறிமுகப் படுத்தியது முதல் அதன் மீதான ஆர்வம் தொழிநுட்ப ஆர்வலர்களிடையே உருவானது.

சாம் ஆல்ட்மன் அதனைத் தொடங்கும்போது பயனர்களை அவர்களின் உள்ளீடுகளை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். அவற்றை 60 நொடி வீடியோவாக சோரா உருவாக்கியது. தொழிநுட்ப உலகில் அது மிகப்பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது.

தற்போது தேர்வு செய்யப்பட்ட தொழிநுட்ப கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள், இயக்குநர்களுக்கு மட்டுமே சோரா பயன்பாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நிறுவனத்தின் தலைமை தொழிநுட்ப அலுவலர் மிரா பேசும்போது, சோராவை இன்னும் மெருகேற்றி வீடியோவுடன் ஓடியோவையும் தருகிற வகையில் தரம் உயர்த்தவுள்ளோம். யதார்த்த அனுபவம் இதன் மூலம் கிடைக்கக் கூடும், எனத் தெரிவித்தார்.

அதே வேளையில் ஓபின் ஏஐ, தனியுரிமை மற்றும் நெறிமுறைகளுக்கு மதிப்பளிப்பதாகவும் பொது பிரபலங்கள் குறித்த விடியோக்களை உருவாக்காது என்றும் இதன் வீடியோக்களில் அது ஏஐ உருவாக்கியது என்பதைக் காட்ட வோட்டர்மார்க் பதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)




# அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் காத்திருக்கிறது ஹூதி படையினரிடம் ஹைப்பர்சோனிக் ஏவுகணை!




யேமனின் கணிசமான பகுதிகளில் ஆட்சி செலுத்திவரும் ஹூதி கிளர்ச்சிப் படையினரிடம் ஒலியின் வேகத்தைப் போல் 5 மடங்கு வேகத்தில் பாயக் கூடிய 'ஹைப்பர்சோனிக்' ரக ஏவுகணைகள் இருப்பதாக ரஷ்யாவின் செய்தி நிறுவனமான ஆர்ஐஏ நவோஸ்தி தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹூதிக்களிடம் அந்த ரக ஏவுகணை இருப்பதற்கான ஆதாரங்களை ஆர்ஐஏ நவோஸ்தி வெளியிடவில்லை என்றாலும் இந்தத் தகவல் மேற்கத்திய நாடுகளைக் கவலையடையச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே, உக்ரைன் போர் விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்துவரும் ரஷ்யா, அந்த நாடுகளுக்கு எதிராக மறைமுகமாக காய்களை நகர்த்தலாம் என்று சந்தேகிக்கப்படும் நிலையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

காஸா போரில் ஹமாஸ் படையினருக்கு ஆதரவாக செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்திவருகின்றனர். அதனை முறியடிப்பதற்காக அந்தக் கடல் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க போர்க் கப்பல்கள் மீது கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை வீசி வருகின்றனர். ஆனால், அவை அனைத்தும் அமெரிக்க கப்பலில் உள்ள வான்பாதுகாப்பு ஏவுகணைகள் இடைமறித்து அழித்து வருகின்றன.

இந்த நிலையில், இடைமறிப்பதற்குக் கடினமான ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் ஹூதி கிளர்ச்சியாளர்களிடம் இருப்பதாக வெளியாகியுள்ள தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே, 'செங்கடல் மோதலில் அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் காத்திருக்கிறது' என்று ஹூதி கிளர்ச்சியாளர்களும் பல முறை எச்சரித்துள்ளமை இங்கே நினைவுகூரத்தக்கது.

(04)

# அவுஸ்திரேலிய வீரர் மத்யூ வேட் முதல் தர கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு!



முதல் தர கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அவுஸ்திரேலிய வீரர் மத்யூ வேட் தெரிவித்துள்ளார்.

முதல் தர கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றாலும், வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாடத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் குறிப்பிடும்போது, முதல் தர கிரிக்கெட்டில் விளையாடிய தருணங்கள் மிகவும் மகிழ்ச்சிகரமானதாக இருந்தன. முதல் தர கிரிக்கெட்டில் உள்ள சவால்களை மகிழ்ச்சியாக எதிர்கொண்டேன்.

தொடர்ச்சியாக வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் விளையாடவுள்ள போதிலும், முதல் தர கிரிக்கெட்டில் எனது நாட்டுக்காக விளையாடிய தருணங்கள் என்றும் நினைவில் இருக்கும், என்றார். (04)

# மீண்டுமொரு அகதிகள் படகு மூழ்கியது 60 பேர்வரை உயிரிழந்ததாக அச்சம்!

*லிபியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்ற அகதிகள் படகு ஒன்று மத்தியதரைக் கடல் பகுதியில் கவிழ்ந்ததில் 60 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*இத்தாலி அல்லது மோல்ட்டோவை நோக்கி அந்தப்படகு சென்றுகொண்டிருந்தபோது நடுக்கடலில் கவிழ்ந்துள்ளது. அந்தப் படகிலிருந்து 25 பேரை 'எஸ்ஓஎஸ் மெடிட்ரேன்' என்ற மீட்புக் கப்பல் காப்பாற்றியுள்ளது.*

*இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் அதிகளவில் பெண்களும், ஒரு குழந்தையும் அடங்குவர் என்று மீட்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.*

*மிகவும் ஆபத்தான அகதிகள் வழித்தடமான மத்தியதரைக் கடல் பகுதியில் கடந்த ஆண்டு மட்டும் சுமார் 2,500 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள் நல ஆணையம் தெரிவித்துள்ளது. (04)*



# இலங்கையில் மாணவர்கள் மத்தியில் பரவிவரும் ஈ – சிகரெட் பாவனை! நுட்பமான வடிவில் தயாரிப்பதால் கண்டுபிடிப்பது சிரமமாக உள்ளதாம்

## கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜி.குணசிறி தெரிவிப்பு

இலங்கையில் குறிப்பாக கிராமப்புறங்களில் அதிகளவில் மின் சிகரெட்டுகள் (ந -உபையசயவவநள) வேகமாக பரவி அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாக இலங்கை கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம். ஜி.குணசிறி தெரிவித்துள்ளார். ஜா எல கலால் விசேட அதிரடி சோதனை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஐந்து இலட்சம் ரூபா பெறுமதி யான ஈ - சிகரெட்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் ஆராயும் நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது கொழும்பு, கம்பஹா, பாணந்துறை போன்ற தலைநகரை மையமாகக் கொண்ட புறநகர்ப் பகுதிகளில் இந்த ஈ -சிகரெட் பாவனையில் அதிகளவிலான மாணவர்கள் ஈடுபடுவது தெரியவந்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஈ–சிகரெட்கள் படிப்படியாக இலங்கையின் தொலைதூரப் பகுதிகளுக்கும் பரவி வருகின்றன. உதாரணமாக இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலையின் மாணவன் ஒருவன், இதுபோன்ற ஈ - சிகரெட்டை தனது பாடசாலைக்கு கொண்டு சென்று சக மாணவர்களிடம் ஒரு தடவைக்கான இழுவைக்கு 20 ரூபாய் கட்டணம் அறவிட்டுள்ளதாக, மாணவர்களின் பெற்றோரால் பாடசாலை அதிபர், பொலிஸார் மற்றும் கலால் துறைக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது.

"இந்த ஈ -சிகரெட்டுகள் தற்போது ஒன்லைனில் விற்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. இவை ஸ்மார்ட் வொட்ச்கள், பென் டிரைவ்கள், பவர் பேங்குகள்,



வாசனை திரவிய போத்தல்கள் போன்ற வடிவங்களில் தயாரிக்கப்பட்டுள்ளதால் இவற்றை சிகரெட்களாக இனங் காண்பது மிகவும் சிரமமாக இருப்பதுடன், இவற்றை பாவிக்கும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்கள் கணினிகளுக்கு அருகில் வாசனை திரவிய போத்தல்களுக்கு அருகில் இவற்றை இனங்காண முடியாதவாறு வைத்திருக்கின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த ஈ - சிகரெட்டுகள் பாரம்பரிய புகையிலை வாசனையை வெளியிடுவதில்லை. மேலும் ஆப்பிள், ஒரேஞ்ச், மாம்பழம், வாழைப்பழம் மற்றும் செர்ரி போன்ற பழங்களின் நறுமணம் இருப்பதால், இதை ஒரு சிகரெட்டாக கருதி உரிய தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் கடினத்தை ஏற்படுத்தியுள்ளது.

அடிக்கடி ரீசார்ஜ் செய்தும் தேவையான நேரத்தில் இந்த ஈ - சிகரெட்களை பயன்படுத்த முடிவதுடன், இவை செயற்கை புகையை உருவாகுவதுடன் நச்சுத்தன்மை மற்றும் அதிக போதைப் பொருளையும் கொண்டிருப்பதனால் உலக சுகாதார அமைப்பும் ஐக்கிய அமெரிக்காவும் இந்த ஈ - சிகரெட்டுக்கு தடை விதித்துள்ளன.

தற்போது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு துறைமுகம் மற்றும் கடல் வழிகள் ஊடாக இந்த ஈ -சிகரெட்கள் இலங்கைக்குள் கொண்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வகை சிகரெட்களை உடனேயே இனங்காண்பது கடினமாக இருப்பதால் கல்வி அதிகாரிகள், பொலிஸ்துறை மற்றும் கலால் துறை அதிகாரிகளுக்கு இவற்றை தடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது" எனவும் கலால் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-50)

# வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணி யானை அடித்து மரணமானார்!

## இன்று அதிகாலை கோமாரியில் சம்பவம்

(வி.ரி.சகாதேவராஜா)

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி ஒருவர் பொத்துவில் கோமாரியில் வைத்து யானையால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்.

இச்சம்பவம் இன்று (15) வெள்ளிக்கிழமை அதிகாலை ஐந்து முப்பது மணி அளவில் கோமாரி களுகொல்ல எனுமிடத்தில் இடம்பெற்றுள்ளது. இன்று அதிகாலை அவர் சகபாடிகளுடன் மோட்டார் சைக்கிளில் கோமாரி கடலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை திடீரென்று வீதியால் வந்த யானை அவரை இழுத்து அடித்துக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவருடன் பயணித்த ஏனையவர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

சுமார் 52 வயது மதிக்கத்தக்க மரணமடைந்தவரது சடலம் தற்பொழுது பொத்துவில் ஆதார வைத்தியசா லையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் நீண்ட காலமாக வீதி மின் விளக்குகள், மின்சார வேலிகள் இல்லாதது யானைகளின் நடமாட் டத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று முன்னாள் பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் த.சுபோதரன் தெரிவித்தார்.




# இயந்திரம் மூலம் நாற்று நடுகை பரந்தனில் செயற்முறைப் பயிற்சி



இயந்திரம் மூலம் நாற்று நடுகைப் பயிற்சியும் செயல்முறையும் பரந்தன் பன்னங்கண்டி பகுதியில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கமக்கார அமைப்புகள் மற்றும் விவசாயிகள், கமநலசேவைத் திணைக்களத்தினர், விவசாயப் போதனா ஆசிரியர்கள், விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் இதன் போது கூறுகையில், இயந்திரம் மூலம் நாற்று நடுகையில் பெறப்படுகின்ற ஓர் ஏக்கருக்கான விலைச்சல் 150 புசலாகவும், சாதாரணமாக வீச்சு விதைப்பில் 120 புசலாகவும் உள்ளது.

இயந்திரம் மூலமான நாற்றுநடுகையினால் அதிக அளவிலான விளைச்சலைப் பெறமுடியும். பயிர்ச் செய்கையின் போது குறைந்த அளவிலான உரங்களையே பயன்படுத்த வேண்டி வரும். விதைப்புக்கு ஏக்கர் ஒன்றுக்கு 7 கிலோ நெல் போதுமானதாகவும், குறைந்த செலவில் அதிகளவிளான விளைச்சலைப் பெற முடியும் எனவும் குறிப்பிட்டார். (02)

# பாடசாலை மாணவர்களுக்கு விற்க முயற்சி 380 போதை மாத்திரைகளுடன் பெண் கைது

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விற்பனை செய்வதற்காக கொண்டு வந்த 380 போதை மாத்திரைகளுடன் பெண் ஒருவர் மொனராகலை பிரதேச ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளினால் ஹம்பேகமுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் ஹம்பேகமுவ, அலுத்வெவ பிரதேசத்தில் வசிக்கும் 51 வயதுடைய பெண் ஆவார்.

மேற்படி பெண் உள்ளூர் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தலா முன்னூறு ரூபாய்க்கு போதைப்பொருள் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரது வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே மேற்படி போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர் மாத்திரைகள் சகிதம் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ரெம-49)




# பேருந்துப் புகார்களை வட்ஸ்அப் செய்யுங்கள்



தனியார் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளின் ஓட்டுநர்கள்மற்றும் நடத்துனர்களால் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றால் அதனை காணொளி அல்லது புகைப்படம் எடுத்து 076 045 0860 என்ற இலக்கத்திற்கு வட்ஸ்அப் செய்யுமாறு மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஓ. டபிள்யூ. பிரசன்ன சஞ்சீவ பயணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நடைமுறையின் மூலம் தவறு செய்யும் பேருந்து ஊழியர்களை அடையாளம் காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். பேருந்து ஊழியர்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும், கடந்த இரண்டு மாதங்களில் பேருந்து ஊழியர்களுக்கு எதிராக 380 முறைப்பாடுகள் பயணிகளிடமிருந்து கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-48)

# இணைய மோசடிகள் தற்போது அதிகரிப்பு!



இணையத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டு மன்றத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக்க தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் 423 கணினி மோசடிகள் பதிவாகியுள்ளதாகவும், குறிப்பாக இணையத்தில் ஒன்லைன் வேலை வழங்குவதாகக் கூறி மோசடி செய்வதும், கிரிப்டோகரன்சிகள், பிரமிட் மோசடிகள் போன்ற மோசடிகளும் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 2023ஆம் ஆண்டில் 1609 இணைய மோசடிகள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இணையத்தில் குற்றங்கள் நடந்தால், கணினி அவசர செயற்பாட்டு மன்றத்தின் 101 இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு புகார் செய்யலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ரெம-47)






## அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரோடு சந்திப்பு



(சர்ஜூன் லாபீர்)

அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ முனாஸீருக்கும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு நேற்று (14) அம்பாறை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தலைமையில் இடம்பெற்ற இந்சந்திப்பில் அமைப்பின் செயலாளர் எம்.அருஸ் இஹ்லாஸ், மாவட்ட இணைப்பாளர் எல்.எம் சர்ஜ/ன், பிரதேச இணைப்பாளர் ஏ.சி பர்ஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்

இச்சந்திப்பில் மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவிருக்கும் எதிர்கால அரச திட்டங்களில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வகிபாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

## இறால் பண்ணையாளர்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் காணி ஒதுக்கீடு!



(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாணத்தின் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூார் விவசாயிகளின் சிறிய அளவிலான இறால் பண்ணை திட்டங்களுக்கான காணிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒதுக்கீடு செய்தார்.

மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலகம் பட்டிப்பளையில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும் கலந்துகொண்டார்.

இதன்போது பயனாளிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.03.2024 இல் வெளியிடப்பெற்றது.